[14th March 1964

விருத்தாசலம் தாலூகாவில் சப்-ரிஜிஸ்திரார் அலுவலகங்கள்

*** 264 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலூகாவில் வேப்பூர், சிறுபாக்கம் முதலிய ஊர்களில் சப்-ரிஜிஸ்திரார் ஆபீசுகள் நிறுவ உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இந்த விஷயத்தை அரசாங்கம் யோசித்து வருகிறது.

கூடலூர் பஞ்சாயத்து ஊழியர்களுக்கான சம்பளம்

*** 265 கேள்வி.—திரு. மா. இராசாங்கம் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெரியகுளம் தாலூகா, கூடலூர் பஞ்சாயத்து ஊழியர்களுக்கு இரண்டு மாதத்திற்கு மேலாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அப்படியானால், அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) போதிய நிதியில்லாக் காரணத்தால் கூடலூர் பஞ்சாயத்து ஊழியர்களின் 1963 அக்டோபர், நவம்பர் மாதச் சம்பளங்கள் முறையே நவம்பர் முதல் தேதியிலும் டிசம்பர் முதல் தேதியிலும் கொடுக்க இயலவில்லை. ஆனால் 1963 டிசம்பர் மாத இறுதிக்குள் அவை கொடுக்கப்பட்டுவிட்டன. இனி, பஞ்சாயத்து ஊழியர்களுக்குச் சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கும்படி பார்த்துக்கொள்ள நிர்வாக அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பஞ்சாயத்தின் நிதி நிலையைக் கவனமாகக் கண்காணித்து வரும்படி பெரியகுளம் சப்-கலெக்டருக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மா. இராசாங்கம் : நிதிநிலை சரியில்லை என்று காரணம் சொன்னார்கள். நிதிநிலை சரியில்லாமல் குறைவாக இருப்பதனால் தான் எந்த அபிவிருத்தி வேலைகளையும் கூடலூர் பஞ்சாயத்து செய்யாமல் இருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த அபிவிருத்தி வேலைகளை அரசாங்கமே எடுத்து நிறைவேற்றித்தர முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தப் பகுதியில் 12,933 ரூபாய் வாட்டர் டாக்ஸ் மூலமாக வந்தது. அவைகளை எக்ஸிக்யூடிவ் ஆபீசர் வேறு பலவற்றில் செலவழித்துவிட்டார். அம்மாதிரி செலவிடக் கூடாது என்றே அரசாங்க உத்தரவு இருக்கிறது. அதனால்தான் அவர்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து வருவாய் குறைவு என்பது சரியல்ல.

14th March 1964]

திரு. மா. இராசாங்கம்: பஞ்சாயத்து யூனியனுக்குத் தர வேண்டிய விகிதாசாரத்தை கூடலூர் பஞ்சாயத்து தர நிதி வசதி இல்லாததால் அவசிய வேலை தடைப்பட்டுப் போய் இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை.

விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட செலவுகள்

* 266 கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல பஞ்சாயத்து யூனியன்களில் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் மலைப்பிரதேசம் என்ற காரணத்தால் செலவழிக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) அத்தொகையை விவசாய சம்பந்தமான இனங்களுக்கு மாற்ற உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம், ஐயா.

(இ) இப்பொருள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து: எத்தனை பஞ்சாயத்துக்களிலே இம்மாதிரி பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று கூற முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: என்னிடம் இருக்கும் தகவல்படி மூன்று பஞ்சாயத்துக்களிலே அப்படி இருக்கிறது. சேலத்தில் ஏற்காடு, கொல்லி மலை, கோயம்புத்தூரில் வால்பாறை

Copies of assignment orders

* 267 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to arrange to communicate the copies of the assignment order to the respective Sub-Registry offices so as to facilitate the public to get loans mortgaging the lands assigned to them, without any difficulty?

கனம் திரு. வெ. ராமைய்யா: இல்லை.

சிமெண்ட்

* 268 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தமிழ் நாட்டிற்கான சிமெண்ட் கோட்டாவை மத்திய அரசாங்கம் குறைத்துள்ளதா?

(இ) அப்படியானால், எவ்வளவு?